ஸ்ரீ பராசர முநிவர் தன் ஶிஷ்யன் மைத்ரேயனுக்குப் பின்னும் கூறுகிறார் –

*"ஹே மைத்ரேய ! முற்காலத்தில் மலைகளெல்லாம் மிகவும் நெருக்கமாக பூமண்டலம் முழுதும் பரவியிருந்ததினால் நகர்ப்புரங்களும் கிராமங்களும் பிரிவுபடாமலேயே இருந்தன. பயிர்த் தொழிலான விவசாயமும், கால்நடை வளர்ப்பும் வாணிபமும் இருக்கவில்லை. ப்ருது சக்ரவர்த்தி அரசனாக முடிசூட்டிக்கொண்ட பின்னரே அவனால் மலைகளெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு நிலப்பகுதி மேடு பள்ளமின்றி சமப்படுத்தப்பட்ட பிறகே நகரங்களும் கிராமங்களும் உண்டாகி அவற்றில் மக்கள் வசிக்க ஆரம்பித்தனர்.*

*அதற்கு முன் காலத்தில் வேனனின் அராஜக ஆட்சியினால் மக்களுக்கு உணவு கிடைப்பதென்பதே மிகவும் அரிதாகவிருந்தது. தன் பிரஜைகளான மக்களின் பசிப்பிணியை நீக்க ப்ருது சக்ரவர்த்தி சுவாயம்புவ மநுவை கன்றுக்குட்டியாக ஆக்கி தனது கைகளையே பால் கரக்கும் பாத்திரமாக ஆக்கிக்கொண்டு பசு ரூபத்திலிருந்த பூமாதேவியின் மடியிலிருந்து அனைத்து ஓஷதிகளையும் கறந்தான். இவ்விதம் ப்ருதுவினால் கறக்கப்பட்ட ஓஷதிகள் பூமியெங்கும் பரவி பிரஜைகளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுத்தன. ப்ருதுவின் இச்செயலினால் பிரஜைகள் பசி நீங்கப் பெற்று பலத்தையும் சக்தியையும் பெற்று மிக்க மகிழ்ச்சியை அடைந்தனர்.*

*இவ்வாறாக ப்ருது பூமிக்கு வளத்தைக் கொடுத்ததினால் அந்த ப்ருதுவின் பெயரை இன்றளவும் நினைவு கூறும் வகையில் பூமிக்கு, "ப்ருத்வீ" என்ற பெயர் ஏற்பட்டது. பின்னர் தேவர்களும், முநிவர்களும், அசுரர்களும், அரக்கர்களும், கந்தர்வர்களும், நாகர்களும், பித்ருக்களும், விருக்ஷங்களும் ப்ருது மாமன்னனின் கருணையினால் தம்தமது ஜாதிக்கான கன்றையும், பாத்திரத்தையும், கறப்பவனையும் உண்டாக்கிக் கொண்டு வேண்டியதைக் கறந்து மகிழ்ச்சி எய்தின.*

*ஸகல பூதங்களையும் தரிப்பவளும், அனைத்தையும் உண்டாக்குபவளும், அவ்விதம் உண்டாக்கப்பட்ட எல்லாவற்றையும் தாங்குபவளும், பகவான் ஸ்ரீமந் நாராயணனின் திருவடித் தாமரைகளிலிருந்து தோன்றியவளுமான பூமாதேவி, ப்ருதிவீ என்ற பெயரில் அழைக்கப்படுபவளாய் சகல ஜீவராசிகளுக்கும் அவரவர்களின் இஷ்டத்தைக் கொடுக்கத் துவங்கினாள். ஹே மைத்ரேய ! இப்படிப்பட்ட அரும்பெரும் செயல்களைப் புரிந்த வேனனின் புத்திரனான ப்ருது சக்ரவர்த்தி இப்பூவுலகில் மிக்க புகழுடன் விளங்கினான்."*

*துஸ்ஸ்வப்ந உபஶமம் ந்ருணாம் ஶ்ருண்வதாம் ஏதத் உத்தமம்|*
*ப்ருதோர் ஜந்ம ப்ரபாவஶ்ச கரோதி ஸததம் ந்ருணாம்||* (1–13–95)

*எவன் ஒருவன் இப்படிப்பட்ட ப்ருது சக்ரவர்த்தியின் சரித்திரத்தைப் படிக்கின்றானோ அல்லது பிறர் படிக்கக் கேட்கின்றானோ, அவன் எல்லா பாபங்களும் நீங்கப் பெற்றவனாய், கெட்ட கனவினால் உண்டான பயமில்லாதவனாய் சுகமாக வாழ்வான்.*

*இதி ஸ்ரீ விஷ்ணு புராணே ப்ரதமே(அ)ம்ஶே த்ரயோதஶோ(அ)த்யாய:|*

* * * * * * * * * * * * * *

## முதல் அம்ஶம் – பதினான்காவது அத்தியாயம்

-----------------------------------------

### ப்ராசீன பர்ஹிஸின் பிறப்பும் ப்ரசேதர்களின் பகவதாராதநமும்

=============================================

***ஸ்ரீ பராஶர உவாச –***

***ப்ருதோ: புத்ரௌ து தர்மஜ்ஞௌ ஜஜ்ஞாதே அந்தர்த்தான வாதிநௌ|***
***ஶிகண்டிநீ ஹவிர்த்தாநமந்தர்தாநாத் வ்யஜாயதே||*** (1–14–1)

***ஹே மைத்ரேய ! ப்ருது சக்ரவர்த்திக்கு அந்தர்த்தானன், வாதி என்ற இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அந்தர்த்தானம், ஶிகண்டிநீ என்பவளை திருமணம் செய்துகொண்டு அவளிடத்தில் ஹவிர்த்தானன் என்ற ஒரு மகனைப் பெற்றான்.***

அந்த ஹவிர்த்தானன் அக்நியின் புத்ரியான தீக்ஷிணையை மணந்துகொண்டு அவளிடத்தில் ப்ராசீன பரஹிஸ், சுக்கிரன், கயன், க்ருஷ்ணன், வ்ருஜன், அஜீனன் என்ற ஆறு புத்திரர்களை பெற்றான். ஹவிர்த்தானனின் மூத்த மகனான ப்ராசீன பர்ஹிஸ் ஒரு மகத்தான ப்ரஜாபதிகத் திகழ்ந்தான். இந்த ப்ராசீன பர்ஹிஸ் புனிதமான தர்ப்பை புற்களை பூமியில் பரப்பி அநேக யாகங்களைச் செய்தினால் அவனுக்கு ப்ராசீன பர்ஹிஸ் என்ற காரணப் பெயர் ஏற்பட்டதுடன் அவன் பிரஜைகளுக்குப் பல நன்மைகளைச் செய்ததினால் அவர்களுக்கு மிகவும் ப்ரியமானவனாக இருந்தான்.

அந்த ப்ராசீன பர்ஹிஸ் ஸமுத்ர ராஜனின் மகளான ஸவர்ணா என்ற பெயருடையவளைத் திருமணம் செய்துகொண்டு அவளிடத்தில் ப்ரசேதஸர்கள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற பத்து பத்து புத்திரர்களைப் பெற்றான். அவர்கள் அனைவரும் வில் வித்தையில் மஹா நிபுணர்களாகத் திகழ்ந்தனர். இந்த ப்ராதேஸர்கள் அனைவரும் ஸமுத்ர ஜலத்தில் மூழ்கி இருந்துகொண்டு ஒரே பலனை அபேக்ஷித்து, ஒரே விதமான தர்மத்தை அநுஷ்டித்துக் கொண்டு பதினாயிரம் வருடம் மிகப்பெரிய தவத்தைச் செய்தனர்.

இவ்விதம் ஆசார்யரான ஸ்ரீ பராஶர மஹரிஷி சொல்லிக் கொண்டு வரும்போது அவரது ஶிஷ்யனான மைத்ரேயர், ***"அந்த மஹாத்மாக்களான ப்ரசேதஸர்கள் ஸமுத்ர ஜலத்தில் மூழ்கியபடி இருந்துகொண்டு எதற்காக அந்த பெரிய தவத்தைச் செய்தனர்?"*** என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ பராஶர மஹாமுநி, ***"சதுர்முக பிரமன் அவர்கள் தந்தையான ப்ராசீன பர்ஹிஸுக்கு ஸத் ப்ரஜைகளை அபிவிருத்தி செய்யும்படி கட்டளையிட்டார். ப்ராசீன பர்ஹிஸும் அப்படியே செய்வேனென்று ஒத்துக் கொண்டதினால் தன் புத்திரர்களான ப்ரசேதர்களிடம் தனக்குப் பிரியமாகும்படியான பிரஜைகளை அபிவிருத்திச் செய்யுங்கள்"*** என்று கேட்டுக் கொண்டான்.

இவ்விதம் தந்தையின் வார்த்தைகளைக் கேட்ட ப்ரசேதஸர்கள், ***"தந்தையே ! நாங்கள் ஸத் பிரஜைகளை அபிவிருத்தி செய்யத் தகுந்த ஆற்றலைப் பெறுவதற்காக யாதொரு செயலைச் செய்ய வேண்டுமென விளக்கமாகக் கூறுங்கள்"*** என்று தங்களின் தகப்பனாரான ப்ராசீன பர்ஹிஸைக் கேட்டுக் கொண்டனர். அதற்கு ப்ராசீன பர்ஹிஸ் தன்

புத்திரர்களிடம், *"பகவான் ஸ்ரீ விஷ்ணுவை ஆராதித்தே ஒருவன் இஷ்ட ஸித்தியை அடைவானேயல்லாமல் வேறு யாதொரு உபாயத்தினாலும் தான் விரும்பியதை அடைய முடியாது. ஆகையினால் நீங்கள் உங்களின் இஷ்டம் ஸித்தியடைய வேண்டுமென்று விரும்பினீர்களேயானால்,பகவான் ஸ்ரீ கோவிந்தனை நன்கு ஆராதித்து ப்ரஜாபிவ்ருத்திக்கான ஆற்றலை அடைவீர்களாக.*

*மேலும் ஒருவன் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்ற நான்குவித புருஷார்த்தங்களை அடைய விருப்பம் கொள்வானேயானால், அவன் ஆத்யந்த ரஹிதனும் (முதல் முடிவு இல்லாதவனும்) எல்லோருக்கும் ஈஶ்வரனான பகவான் ஸ்ரீ புருஷோத்தமனை அர்ச்சிக்க வேண்டும். முற்காலத்தில் சதுர்முக பிரமன் பகவான் ஸ்ரீ ஜனார்தனனை ஆராதித்தே ஸ்ருஷ்டி செய்யும் ஆற்றலைப் பெற்றான். அதைப் போன்றே நீங்களும் பகவான் ஸ்ரீ அச்யுதனை ஆராதித்தால் ப்ரஜாபிவ்ருத்திக்கு ஏற்றதான ஸாமர்த்தியம் உங்களுக்கு நிச்சயம் உண்டாகும்"* என்று ப்ராசீ பர்ஹிஸ் கூறினான்.

இவ்விதம் தங்களது தந்தை கூறக் கேட்ட ப்ரசேதஸர்கள் பதின்மரும் தங்கள் தந்தையின் வாக்கின் ப்ரகாரம் பகவான் ஸ்ரீமந் நாராயணனைக் குறித்து தவமியற்ற நிச்சயித்தனர். அதனால் அவர்கள் ஸமுத்ர ஜலத்தில் மூழ்கி ஏகாக்ர சிந்தையுடன் ஸர்வலோக ஶரண்யனும், ஜகத்பதியுமான ஸ்ரீமந் நாராயணனின் திருவடித் தாமரைகளில் தங்களது மனதை நிலைநிறுத்தி, பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்து ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணனை மனமாரத் துதித்து ஸ்தோத்ரம் செய்தனர்.

இவ்வாறாக ஸ்ரீ பராஶர மாமுநி சொல்லிக் கொண்டு வரும்போது, ஸ்ரீ மைத்ரேயர் அவரை நோக்கி, *"ஹே மாமுநிவரே ! ப்ரசேதஸர்கள் ஸமுத்ரத்தில் மூழ்கியிருந்தபடி பகவான் ஸ்ரீமந் நாராயணனை ஸ்தோத்ரம் செய்து துதித்தார்களென்று சொன்னீர்களல்லவா? அந்த பவித்ரமான ஸ்தோத்ரத்தை தயை கூர்ந்து அடியேனுக்குக் கூற வேண்டும்"* என்று ப்ரார்த்தித்தார்.

இவ்விதம் ப்ரார்திதத்த தன் ஶிஷ்யன் மைத்ரேயனிடம் ஸ்ரீ பராஶர மஹரிஷியானவர், *"ஹே பிராம்மணர்களில் சிறந்தோனே ! பக்தி பரவசத்தினால் ப்ரசேதஸர்கள் ஏகாக்ர சிந்தையுடன் ஸமுத்ர ஜலத்தில் மூழ்கி இருந்தபடியே பகவான் ஸ்ரீ விஷ்ணுவிடம் செய்த ஸ்துதியை உனக்குக் கூறுகின்றேன். அமைதியுடன் கேட்பாயாக"* என்று சொல்லிவிட்டு அந்த ஸ்ரீ விஷ்ணு ஸ்துதியை சொல்ல ஆரம்பித்தார்.

***ப்ரசேதஸ ஊசு:***

*நதா: ஸ்ம ஸர்வ வசஸாம் ப்ரதிஷ்டா யத்ர ஶாஶ்வதீ|*
*தம் ஆத்யந்தம் அஶேஷஸ்ய ஜகத: பரமம் ப்ரபும்||* (1–14–23)

*அனைத்து ஶப்தஜாதங்களும் எதனிடம் சென்று நிலைபெறுகின்றதோ, அப்படிப்பட்ட அனைத்து உலகங்களையும் படைத்து, காத்து, அழிக்கின்ற ஸர்வ ஜகந்நாயகனான பரம ப்ரபுவை நாங்கள் நமஸ்கரிக்கின்றோம்.*

*(ப்ராசீன பர்ஹிஸின் பிறப்பும் ப்ரசேதஸர்களின் பகவதாராதநமும் தொடரும்)*